**மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்/மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்**

**பிறப்பிப்பவர் : திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப.,**

**ந.க.எண். 000414/நிர்2/2022** **நாள் : 31.01.2022**

**பொருள் :** பணியமைப்பு – மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை–5 – கரூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் கருணை அடிப்படையில் 26.05.2020 மு.ப. முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. க. ரவிக்குமார் என்பவருக்கு 26.05.2020 மு.ப. முதல் பணிவரன்முறை முடித்தும் மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண். 235, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1)த்துறை, நாள் : 26.09.2013
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத்துறை நாள் 01.08.2018
3. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் செ.மு.ந.க.எண். 8224/நிர்2/2019, நாள்: 13.03.2020.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை நாள் : 23.01.2020.

--------

**ஆணை :**

பார்வை 3ல் காணும் 13.03.2020 நாளிட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட காலிப் பணியிடங்களின் அடிப்படையிலும் இறந்த அரசு ஊழியர் செல்வி. க. சரோஜா, அலுவலக உதவியாளர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், புதுக்கோட்டை என்பவரது வாரிசுதாரர் திரு. க. ரவிக்குமார், என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அடிப்படை பணியாளர் தொகுதி மற்றும் சார்நிலை பணிகளுக்கான விதிகள் பொதுவிதி 10(அ) 1ன் கீழ் தற்காலிக அடிப்படையில் கரூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை 2 மற்றும் 4ல் காணும் அரசாணைகளின்படி கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு தேவையில்லை எனக்கு குறிப்பிட்டுள்ளதனைத் தொடர்ந்து, தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி விதிகளின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் பணிநிபந்தனைச்சட்டம் 2016, பிரிவு 28(1) ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் 26.05.2020 (மு.ப) முதல் பணிவரன்முறை செய்தும், தொடர்ச்சியாக 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண் பருவத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/ பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

(அ) அலுவலக நடைமுறை நூல் (DOM)

(ஆ) இளநிலை உதவியாளருக்கான பவானி சாகர் அடிப்படைபயிற்சி

4) தனியரின் பணிப்பதிவேட்டில் தனியரின் பணிவரன்முறை செய்த விவரத்தின் பதிவுகள் மேற்கொண்டு, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கரூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது

(ஓம்/-) ஜானி டாம் வர்கீஸ்
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்/மாற்றுத்திறனாளிகள்
நல இயக்குநர்

பெறுநர்

திரு. க. ரவிக்குமார்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
கரூர் மாவட்டம். (மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வாயிலாக)

நகல்:

1 .மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

2.அரசு செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை -09.

3. இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி //

3/1/22

இணை இயக்குநர் (பொ)

31/1/22